ශියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020

தரம் : 10

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் - I**

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය - I

நேரம்: 1 மணித்தியாலம்

* சகல வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
* இலக்கம் 1 முதல் 40 வரையிலான வினாக்களுக்கு 1, 2, 3, 4 என வழங்கப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையின் இலக்கத்தினை தெரிவு செய்து அதற்குரிய கூட்டில் (X) அடையாளமிடுக.

---

1. பிறந்ததிலிருந்து இறக்கும் வரை மனிதனுக்கு பல்வேறு பொருட்கள், சேவைகள் தேவைப்படுகின்றன சேவை வணிகத்திற்கு உதாரணமாகக் கூறக் கூடியது.
   1) பாண் உற்பத்தி  2) ஆடை உற்பத்தி
   3) அஞ்சல் அலுவலகம்  4) டயர் உற்பத்தி

2. வணிகங்களை ஆரம்பிப்பதற்கு பல்வேறு உற்பத்திக் காரணிகள் தேவைப்படுகின்றன. மூலதனம் எனும் உற்பத்திக் காரணிக்குள் உள்ளடங்குவவை
   1) பணம், இயந்திரம், கட்டடம்  2) இயந்திரம், காணி, உரிமையாளர்
   3) ஊழியர், முகாமையாளர், உரிமையாளர்  4) இயற்கை வளங்கள், பணம், கட்டடம்

3. உற்பத்திக் காரணி எனும் வகையில் நிலம் என்பதை சரியாக வரைவிலக்கணப்படுத்துவது
   1) வணிகத்திற்குரிய கட்டடமாகும்
   2) வணிகத்திற்குரிய நிலமாகும்
   3) கனிய எண்ணெய் வளம், காட்டுவளமாகும்
   4) இயற்கையாக கிடைக்கப் பெற்றுள்ள சகல வளங்களுமாகும்

4. வணிகத்தில் அக்கறை செலுத்தும் பிரிவினர் என்பது,
   1) வணிகத்தின் உரிமையாளராவார்.
   2) கடன் வழங்கும் நிறுவனமாகும்.
   3) வாடிக்கையாளராவார்.
   4) வணிகம் தொடர்பில் ஆர்வம் காட்டும் பிரிவினராவார்.

5. நிதி நிறுவனங்கள் வணிகங்கள் தொடர்பில் அக்கறை காட்டுவதற்கான காரணம் பின்வருவனவற்றுள் எதுவாகும்?
   1) வரி செலுத்துவதற்காகும்.
   2) போட்டிக்கு முகம் கொடுப்பதற்காகும்.
   3) வழங்கிய கடனை அறவிட்டுக் கொள்வதற்காகும்.
   4) நியாயமான சம்பலத்தைப் பெற்றுக் கொள்வதற்காகும்.

6. முகாமையாளர்கள் வணிகம் தொடர்பில் அக்கறை காட்டுவதற்கான காரணம்
   1) முகாமைத்துவத்துவச் செயற்பாடுகள் வெற்றியை அறிந்து கொள்வதற்காகும்.
   2) வணிகத் திட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்துவதற்காகும்.
   3) வணிகக் கருமங்களை மேற்பார்வை செய்வதற்காகும்.
   4) ஊழியர் வினைத்திறனை அதிகரிப்பதற்காகும்.

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது



kalvi.lk

7. வணிகமொன்றின் வளங்களை நெறிப்படுத்துவதற்கு தேவையான தீர்மானங்கள் எடுக்கப்படுவது.
   1) ஊழியர்களினாலாகும்
   2) முகாமையாளர்களினாலாகும்
   3) உரிமையாளரினாலாகும்
   4) வாடிக்கையாளரினாலாகும்

8. வணிகமொன்றை நடாத்திச் செல்லும் போது மூலப் பொருள், போக்குவரத்து போன்ற ஏனைய சேவைகளை வழங்கும் பிரிவினர் அழைக்கப்படுவது.
   1) வாடிக்கையாளர் எனவாகும்
   2) வழங்குநர் எனவாகும்
   3) முகாமையாளர் எனவாகும்
   4) இணைப்பாளர் எனவாகும்

9. தனி நபர்கள் தாம்பெறும் வருமானங்களில் நுகர்வுக்காக செலவழித்தபின் எஞ்சும் தொகை
   1) முதலீடு என அழைக்கப்படும்
   2) புரள்வு என அழைக்கப்படும்
   3) மிகை என அழைக்கப்படும்
   4) சேமிப்பு என அழைக்கப்படும்

10. வணிகச் சூழலில் இடம் பெற்ற சில நிகழ்வுகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றுள் பொருளாதாரச் சூழலுக்குரிய நிகழ்வுகளை மாத்திரம் காட்டும் காரணிகள் எவை?
   A - வங்கிக் கடன்களுக்கான வட்டி வீதமானது குறைவடைந்துள்ளமையால் வங்கிக் கடனுக்கான கேள்வி அதிகரித்துள்ளது
   B - புதிய அரசின் வரவு செலவுத்திட்டக் கொள்கை தொடர்பில் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.
   C - தற்போது காணப்படுகின்ற கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக வெளி நாணயப் பரிமாற்று வீதத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.
   D - உள் நாட்டு கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கு புதிய சட்டமொன்று இயற்றப்படவுள்ளது.
   1) ABC
   2) ACD
   3) AB
   4) AC

11. சமகாலத்தில் வணிக வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ள தொலைபேசி வங்கிமுறையானது எப் பெயரினால் அழைக்கப்படுகிறது.
   1) தொலைபேசி வங்கி முறை
   2) E - Bank முறை
   3) மொபைல் வங்கிச் சேவை
   4) டெலி வங்கிச் சேவை

12. வணிகத்தின் பலம் மற்றும் வாய்ப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
   A - முகாமையாளர்களின் அனுபவம்
   B - அரசினால் வணிகங்களுக்கு வரிச் சலுகைகள் வழங்கப்படல்
   C - நுகர்வோரின் வாழ்க்கை முறைகள் மாற்றமடைதல்
   D - சிறந்த உற்பத்தி முறைகள் பயன்படுத்தப்படல்
   இங்கு குறிப்பிடப்பட்டவைகளுள் வணிகமொன்றின் பலங்கைள மாத்திரம் உள்ளடக்கிய விடை எது?
   1) A மட்டும்
   2) A யும் B யும்
   3) A யும் D யும்
   4) B யும் C யும்

13. சனநாயக ரீதியான நிர்வாகத்தை கொண்டுள்ள வணிக அமைப்பு முறை எது?
   1) அரச கூட்டுத்தாபனம்
   2) கூட்டுறவு வணிகம்
   3) சங்க அமைப்புக்கள்
   4) அரச திணைக்களங்கள்

14. பின்வரும் வணிக நிறுவனங்களுள் சட்ட ஆளுமையினைக் கொண்டுள்ள வணிக அமைப்பு எது?
   1) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
   2) அரச திணைக்களங்கள்
   3) பங்குடமை வணிகம்
   4) தனியுரிமை வணிகம்

15. தனியுரிமை வணிகமொன்றைப் பதிவு செய்வதன் மூலம் அவ் வணிகத்திற்கு
   1) சட்ட ஆளுமை கிடைக்கப் பெறும்
   2) சட்ட அங்கீகாரம் கிடைக்கப் பெறல்
   3) நீண்ட கால நிலைப்பாடு காணப்படல்
   4) வரிவிடுதலை கிடைக்கப் பெறல்



kalvi.lk

16. தனியுரிமை வணிகமொன்றைப் பதிவு செய்ய வேண்டியது,
   1) வணிகப் பெயர்ப்பதிவு அலுவலகத்திலாகும்.
   2) குறித்த பிரதேச சபையிலாகும்.
   3) குறித்த மாகாண சபையிலாகும்.
   4) பிரதேச செயலாளர் காரியாலயத்திலாகும்.

17. கீழே நிரல் X இல் கணக்கு வகைகளும் நிரல் Y இல் பேரேட்டு கணக்குகள் சிலவும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1) சொத்துக் கணக்கு | A) விற்பனைக் கணக்கு |
| 2) பொறுப்புக் கணக்கு | B) பற்றுக் கணக்கு |
| 3) உரிமையாண்மைக் கணக்கு | C) உபகரணக் கணக்கு |
| 4) வருமானக் கணக்கு | D) கடன் கொடுநர் கணக்கு |
| 5) செலவுக் கணக்கு | E) காப்புறுதிக் கட்டணக் கணக்கு |

X மற்றும் Y நிரல்களை முறையாக சீராக்கும் போது கிடைக்கும் விடையாக அமைவது,
   1) C,D,B,A,E   2) A,D,B,C,E   3) C,B,D,A,E   4) D,C,B,A,E

18. உரிமையாளரின் உரிமையாண்மையில் தாக்கத்தையேற்படுத்தும் கொடுக்கல் வாங்கல் எது?
   1) காசுக்கு கொள்வனவு செய்த சரக்குகள் ரூபா 20, 000
   2) கடன் கொடுத்தோருக்குச் செலுத்திய காசு ரூபா 10, 000
   3) வங்கியில் பெற்ற கடன் ரூபா 75 000
   4) ரூபா 80 000 பொருட்கள் ரூபா 100 000 க்கு கடனுக்கு விற்பனை

19. பின்வரும் பண்புகளுள் சொத்தில் காணப்படுகின்ற பாண்பொன்றல்லாதது,
   1) கடந்த காலக் கொடுக்கல் வாங்கலில் பெறுபோறாக அமைதல்
   2) வணிகத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருத்தல்
   3) நிகழ்கால கடப்பாடொன்று காணப்படல்
   4) எதிர்காலத்தில் வணிகத்திற்கு பொருளாதார அனுகூலங்கள் உட்பாய்ச்சப்படல்

20. குசும் வணிகத்தின் குறித்த நாளொன்றின் கணக்கீட்டுச் சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது.

| சொத்துக்கள் (ரூ) | = உரிமையாண்மை (ரூ) | + பொறுப்புக்கள் (ரூ) |
|---|---|---|
| 550 000 | = 375 000 | + 175 000 |

குசும் தனது தொலைபேசிக் கட்டணமான ரூபா 10 000 வை வணிகத்தின் பணத்தைக் கொண்டு செலுத்தியுள்ளார். இதன் பின்னர் கணக்கிட்டுச் சமன்பாடு எவ்வாறு காணப்படும்.
   1) 540 000 = 375 000 + 165 000   2) 550 000 = 375 000 + 175 000
   3) 540 000 = 365 000 + 175 000   4) 550 000 = 365 000 + 185 000

21. கொடுக்கல் வாங்கலொன்றைப் பதிவு செய்வதற்கான இரட்டைப் பதிவு கீழே தரப்பட்டுள்ளது.
   வங்கிக் கடன் கணக்கு வரவு ரூ 50 000
      காசுக் கணக்கு செலவு ரூ 50 000
   இங்கு குறிப்பிடப்படுகின்ற கொடுக்கல் வாங்கலாக அமைவது
   1) வங்கிக் கடன் எடுத்தது ரூபா 50 000
   2) வங்கிக் கடன் தவணைக் கட்டணம் செலுத்தியது ரூபா 50 000
   3) கடன் பட்டோர் செலுத்திய காசு ரூபா 50 000
   4) கடன் கொடுத்தோருக்குச் செலுத்திய காசு ரூபா 50 000

22. கொடுத்த கழிவு, பற்று, செலுத்த வேண்டிய வங்கிக் கடன் வட்டி என்பன முறையே,
   1) சொத்துக் கணக்கு, செலவுக் கணக்கு, பொறுப்புக் கணக்குகளைச் சேர்ந்ததாகும்
   2) செலவுக் கணக்கு உரிமைக் கணக்கு, பொறுப்புக்கணக்குகளைச் சேர்ந்ததாகும்
   3) செலவுக் கணக்கு, சொத்துக் கணக்கு, உரிமைக் கணக்கைச் சேர்ந்தாகும்
   4) பொறுப்புக் கணக்கு, உரிமைக்கணக்கு, பொறுப்புக் கணக்கைச் சேர்ந்தாகும்


kalvi.lk

23. வணிகத்திற்கு பங்கிலாப வருமானமாக ரூபா 3 000 கிடைக்கப் பெற்றுள்ளது. இக் கொடுக்கல் வாங்களைப் பதிவு செய்ய வேண்டிய கணக்கு வகைகளாவன.
   1) சொத்துக் கணக்கு, வருமானக் கணக்குமாகும்.
   2) சொத்துக் கணக்கும் உரிமைக்கணக்குமாகும்.
   3) வருமானக் கணக்கும் உரிமைக்கணக்குமாகும்.
   4) சொத்துக் கணக்கும் செலவுக் கணக்குமாகும்.

24. வெளி திரும்பலைப் பதிவு செய்வதற்கு பயன்படுத்துகின்ற மூல ஆவணம்
   1) பட்டியலாகும் 2) வரவுத் தாளாகும்
   3) செலவுத்தாளாகும் 4) கட்டளையாகும்

25. பற்றுக் கணாக்காளனது எக் கணக்கு வகையைச் சேர்ந்தது,
   1) சொத்துக் கணக்கு 2) செலவுக் கணக்கு
   3) உரிமையாண்மைக் கணக்கு 4) வருமானக் கணக்கு

26. முதன்மை ஏடுகள் தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்று எது?
   1) வணிகத்தில் சகல கொள்வனவுகளும் நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும்.
   2) நாட்குறிப்பேட்டில் கொடுக்கல் வாங்கல்களை முதற் பதிவு செய்வதற்குரிய மூல ஆவணம் வரவுத் தாளாகும்.
   3) வணிகத்தின் பாவனைக்காக கடனுக்கு கொள்வனவு செய்யப்படுகின்ற இயந்திரத்தின் பெறுமதி முதலில் பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும்.
   4) கொடுக்கல் வாங்கலொன்றைப் பதிவு செய்வதற்கான விசேட மூல ஏடொன்று காணப்படாத சந்தர்ப்பத்தில் அது காசேட்டில் பதிவு செய்யப்படும்.

27. மின்சார உபகரணங்களை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்று தனது பாவனைக்காக இயந்திரமொன்றைக் கடனுக்கு கொள்வனவு செய்துள்ளது. இதனைப் பதிவு செய்வதற்குரிய மூல ஆவணமாக அமைவது,
   1) நாட்குறிப்புக் கைச்சாத்து 2) விற்பனைப்பட்டியல்
   3) கொடுப்பனவுக் கைச்சாத்து 4) கொள்வனவுப் பட்டியல்

28. பேரேட்டிலுள்ள கடன் கொடுநர் கணக்கானது (1) ............................................ ஆகக் காணப்படுவதுடன் பெற்ற கழிவுக் கணக்காவது ஒரு (2) .................................. காகும், மேலே (1), (2) இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடையினை முறையாகக் காட்டும் விடை எது?
   1) சொத்துக்கணக்கு, பொறுப்புக் கணக்கு 2) வருமானக் கணக்கு, உரிமைக் கணக்கு
   3) பொறுப்புக் கணக்கு, வருமானக் கணக்கு 4) பொறுப்புக் கணக்கு, செலவுக் கணக்கு

29. கொடுக்கல் வாங்கலொன்றைப் பதிவு செய்வதற்குரிய இரட்டைப்பதிவு கீழே தரப்பட்டுள்ளது வட்டிக்
   கடன் வட்டிக் கணக்கு வரவு ரூபா 1000
   காசுக் கணக்கு செலவு ரூபா 1000
   1) மீளச் செலுத்திய வாங்கிக் கடன் ரூபா 1000
   2) கடன் வட்டி செலுத்தியது ரூபா 1000
   3) பெற்ற வங்கிக் கடன் ரூபா 1000
   4) கடன் கொடுநருக்குச் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 1000

30. சுனேத்ரா வணிகத்தில் 2020.01.01 இல் சில்லறைக் காசாளரிடம் ரூபா 250 காணப்பட்டது. அத் திகதியில் பிரதம காசாளரிடமிருந்து ரூபா 2750 கிடைக்கப் பெற்றதுடன் ஜனவரி மாத்திற்கான செலவுகள் ரூபா 2800 வாகக் காணப்பட்டது. சுனேத்ரா வணிகத்தின் சில்லறைக் காசு வசக்கட்டின் பெறுமதி எவ்வளவு?
   1) ரூபா 3050 2) ரூபா 2750 3) ரூபா 2800 4) ரூபா 3000



kalvi.lk

31. தளபாட வியாபார நிலையமொன்றின் உரிமையாளரான ஷெஹானின் வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்கள் சில பின்வருமாறு. இக்கொடுக்கல் வாங்கல்களுள் கொள்வனவு நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யும் கொடுக்கல் வாங்கல் எது?
    1) காசுக்குக் கொள்வனவு செய்த தளபாடங்கள் ரூபா 100 000
    2) தளபாடங்கள் கடனுக்கு கொள்வனவு ரூபா 250 000
    3) மோட்டார் வாகனங்கள் கடனுக்கு கொள்வனவு ரூபா 400 000
    4) இயந்திரமொன்று கடனுக்கு கொள்வனவு ரூபா 120 000

32. விற்பனை நாட்குறிப்பேட்டின் கூட்டுத்தொகையானது?
    1) விற்பனைக் கணக்கில் வரவு வைக்கப்படும்
    2) கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்படும்
    3) விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்படும்
    4) கடன்பட்டோர் கணக்கில் செலவு வைக்கப்படும்

33. விளம்பல் எழுதப்படுகின்ற முதன்மை ஏடாக அமைவது,
    1) கொள்வனவு நாட்குறிப்பேடு
    2) பொது நாட்குறிப்பேடு
    3) விற்பனை நாட்குறிப்பேடு
    4) மேலே குறிப்பிட்ட சகலதும்

34. வங்கி இணக்கக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்ற உருப்படிகளை மாத்திரம் கொண்டுள்ள விடைத் தொகுதி எது?
    1) நிலையியற் கட்டளைக் கொடுப்பனவு, மாற்றப்படாத காசோலைகள்
    2) மாற்றப்படாத காசோலைகள், தீர்வையாகாத காசோலைகள்
    3) நேரடிவைப்புக்கள், நிலையியற் கட்டளைக் கொடுப்பனவுகள்
    4) நேரடி வைப்புகள், தீர்வையாகாத காசோலைகள்

35. பசீர் வணிகத்தின் கடன் பட்டோனான லசித் ரூபா 15 000 பணத் தொகையினை பசீரின் வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்புச் செய்தார். இதன் காரணமாக.
    1) வங்கிக் கூற்றின் மிதியானது வங்கிக் கணக்கில் மிதியை விடக் கூடுதலாகக் காணப்படும்.
    2) வங்கிக் கணக்கின் மீதியானது வங்கிக் கூற்றின் மீதியை விடக் கூடுதலாகக் காணப்படும்.
    3) வங்கிக் கூற்றின் மீதி வங்கிக் கணக்கின் மீதியை விடக் குறைவடையும்
    4) வங்கிக் கணக்கு மீதியும் வங்கிக் கூற்று மீதியும் மாற்றமடையாது.

36. வணிக மொன்றில் கொடுத்த கழிவினைப் பதிவு செய்வதற்குரிய சரியான இரட்டைப்பதிவைத் தெரிவு செய்க.
    1) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு<br>கடன்பட்டோர் கணக்கு செலவு
    2) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு<br>கடன் கொடுநர் கணக்கு செலவு
    3) கடன்பட்டோர் கணக்கு வரவு<br>கொடுத்த கழிவுக் கணக்கு செலவு
    4) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு<br>கொள்வனவுக் கணக்கு செலவு

37. சம் டெக்ஸ்டைல் 2019.12.31 இல் தயாரித்த பரீட்சை மீதியில் வரவுப் பக்கத்தின் மொத்தமானது ரூபா 7000 குறைவாகக் காணப்பட்டது. இவ்வித்தியாசத்தை
    1) தொங்கல் கணக்கில் செலவு மீதியாகப் பதிவு செய்தல் வேண்டும்.
    2) பொது நாட்குறிப்பேட்டில் குறிப்பாகப் பதிவு செய்தல் வேண்டும்
    3) தொங்கல் கணக்கில் வரவு மீதியாகப் பதிவு செய்தல் வேண்டும்
    4) பிழை ஏற்பட்ட கணக்கில் வரவு மீதியாகப் பதிவு செய்தல் வேண்டும்



kalvi.lk

38. லக்ஸான் வணிகத்தின் 2020.03.20 இல் செலுத்தப்பட்ட ஊழியர் சம்பளம் ரூபா 15 000 காசுக் கணக்கிலும் சம்பளக் கணக்கிலும் செலவு வைக்கப்பட்டுள்ளது. இவ் வழுவினைத் திருத்துவதற்குரிய பொது நாட்குறிப்புப் பதிவு எது?

1) காசுக் கணக்கு வரவு ரூ 15 000
   சம்பளக் கணக்கு செலவு ரூ 15 000
2) சம்பளக் கணக்கு வரவு ரூ 15 000
   தொங்கல் கணக்கு செலவு ரூ 15 000
3) சம்பளக் கணக்கு வரவு ரூ 30 000
   காசுக் கணக்கு செலவு ரூ 30 000
4) சம்பளக் கணக்கு வரவு ரூ 30 000
   தொங்கல் கணக்கு செலவு ரூ 30 000

39. உபகரணங்களைத் திருத்துவதற்கு ஏற்பட்ட செலவு ரூபா 14 000 உபகரணங்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. இதனைத் திருத்துவதற்குரிய சரியான இரட்டைப் பதிவு

1) உபகரணக் கணக்கு வரவு ரூபா 14 000
   உபகரணத் திருத்தல் செலவுக் கணக்கு வரவு 14 000
2) உபகரணத் திருத்தற் செலவுக் கணக்கு வரவு 14 000
   உபகரணக் கணக்கு செலவு ரூபா 14 000
3) உபகரண திருத்தற் செலவுக் கணக்கு வரவு ரூபா 28 000
   உபகரணக் கணக்கு செலவு ரூபா 28 000
4) உபகரண திருத்தற் செலவுக் கணக்கு வரவு ரூபா 14 000
   தொங்கல் கணக்கு செலவு ரூபா 14 000

40. பரீட்சை மீதி தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்று எது?

1) கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ள பெறுமதிகளும், செலவு வைக்கப்பட்டுள்ள பெறுமதிகளும் சமமானது என்பதை உறுதிப்படுத்த முடியும்.
2) கணக்குகள் சரியாக சமப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த முடியும்
3) கணக்குகளின் வரவுப்பக்கக் கூட்டுத் தொகைக்கு செலவுப்பக்க கூட்டுத் தொகை சமமாயின் கணக்கு வைப்பானது இரட்டைப் பதிவு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என உறுதிப்படுத்த முடியும்.
4) கணக்குகளின் மீதிகள் உள்ளடக்கிய அட்டவணையொன்றாக மாத்திரம் இது இருப்பதுடன், பேரேடுகளின் பொழிப்பாகவும் இதனை எடுக்கலாம்.

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457